**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 126/2017**

2025–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 16.09.2025 | கணவர் பெயர்: | ஷேக் அலாவுதீன் |
| பெயர்: | தில்ஷாத் பேகம் (PW–1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | துளசேந்திரபுரம் | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 44/2025 |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :16.09.2025**

**(ஆரம்பித்த நேரம்– 13.46)**

1. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் நாங்கள் அனுபவித்து வருகின்ற இடத்தை இடையூறு செய்யக்கூடாது என் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது முதன்மை விசாரணையானது 2ம் வாதியான எனது சகோதரிக்கும் சேர்த்து தான். எத்தனை அயிட்ட சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 3 அயிட்ட சொத்துக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 3 அயிட்ட சொத்துக்களும் துளசேந்திரபுரத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் என்பது 418/1A ஆகும்.

2. தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்கு சொந்தமானது என்றால் எங்கள் தகப்பனாருக்கும், பெரியப்பாவுக்கும் சொந்தமானது. அவர்களால் தாவா சொத்து 1964ல் கிரயம் பெறப்பட்டது. அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த 1964ம் வருடத்திய கிரயப்பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை ஆனால் வழக்கிற்காக பொய்யாக

கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரும் பெரியப்பாவும் யாரிடமிருந்து அந்த சொத்தை வாங்கினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3. எனது பெரியப்பா எனது தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்த கடந்த 25.12.1969 தேதியிட்ட பாக பாத்திய விடுதலைப்பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. கடந்த 1964, 1969 வருடத்திய ஆவணங்களை நான் தாக்கல் செய்தால் தாவா சொத்தின் உண்மை நிலவரம் தெரிய வரும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 25.12.1969 தேதியிட்ட பாக பாத்திய விடுதலைப்பத்திரத்தில் தண்ணீர் பந்தல் கிராமத்தில் உள்ள சர்வே எண்ணை பொருத்துதான் உள்ளது, ஆனால் துளசேந்திரபுரத்தில் உள்ள சொத்துக்களை பொருத்து இல்லை என்றால் சரியல்ல, துளசேந்திரபுரத்தில் உள்ள சொத்தை பொருத்துதான் உள்ளது.

4. தாவா சொத்து 1969ம் வருடத்திய பத்திரத்தில் தண்ணீர்பந்தல் கிராமத்தில் உள்ளது என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் பத்திரத்தை பார்த்தால்தான் தெரியும். 25.12.1969 தேதியிட்ட பாக பாத்திய விடுதலைப்பத்திரத்தின் படி தண்ணீர்பந்தல் கிராமத்தில் உள்ள தாவா சொத்தை பொறுத்து துளசேந்திரபுரம் கிராமத்தில் உள்ள சொத்தை எனது தகப்பனார் எங்களுக்கு செட்டில்மெண்ட் செய்யமுடியாது என்றால் சரியல்ல. 1964ம் வருடத்திய பத்திரத்தில் தாவா சர்வே எண் ஆயங்குடிபள்ளத்தில் உள்ளது என்று உள்ளது என்றால் பத்திரத்தை பார்த்தால்தான் தெரியும்.

5. எனக்கும் எனது சகோதரிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அசலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, சான்றிட்ட நகல் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது, அசல் வீட்டில் உள்ளது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணம் ஹிபா வாசகப்படி இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஹிபா வாசகப்படி இல்லாத காரணத்தால் அந்த ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1

மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தகப்பனாருக்கு தாவா சொத்து எப்படி வந்தது என கூறப்பட்டுள்ளது என்றால் பாக பாத்திய விடுதலைப்பத்திரம் மூலம் கிடைக்கப்பெற்றது என்றுள்ளது.

6. தாவா சொத்தில் சுடுகாடு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் ('அ' அட்டவணை) சொத்திற்கு நான்கெல்லையாக அன்சார் பேகம் நஞ்சைக்கு தெற்கு, நடேசன் வகையறா புஞ்சைக்கு வடக்கு, கலியமூர்த்தி, அப்துல்லா, கருப்பையா, ரங்கசாமி, சீதாலட்சுமி இவர்கள் நஞ்சைக்கு மேற்கு, கோபாலசமுத்திரம் ஊராட்சி எல்லைக்கு கிழக்கு இதற்குட்பட்டது. கோபாலசமுத்திரம் ஊராட்சி எல்லை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. பொதுவாக நான்கெல்லையில் வருவாய் கிராமத்தின் பெயரை தான் குறிப்பிடுவார்கள் என்றாலும் ஊராட்சியை குறிப்பிட மாட்டார்கள் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் எனது தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்தது. வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் ('ஆ' அட்டவணை) சொத்திற்கு நான்கெல்லையாக ஜெய்புனிசா செட்டில்மெண்ட் புஞ்சைக்கு வடக்கு, தில்ஷாத் பேகம் செட்டில்மெண்ட் புஞ்சைக்கு தெற்கு, பக்கிரிசாமி புஞ்சைக்கு மேற்கு, கோபாலசமுத்திரம் ஊராட்சி எல்லைக்கு கிழக்கு இதற்குட்பட்டது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 14.28)**